**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.37/2013**
**Deposition of witness for prosecution -PW-4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.நாகரெத்தினம் |
| Father Name | : | திரு.சின்னத்தம்பி |
| Village | : | தல்லுக்காடு |
| Taluk | : | கீழக்கரை |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of 08 th day of November 2019.

முதல் விசாரணை :-

நான் இராமநாதபுரம் ஆயுதப்படையில் உள்ள துப்பறியும் நாய்படை பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு இராமநாதபுரம் ஆயுதப்படையில் உள்ள துப்பறியும் நாய்படை பிரிவில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 03.08.2012 ம் தேதியன்று இராமநாதபுரம் மாவட்ட தனிப்பிரிவு அலுவலகத்தில் இருந்த கிடைத்த தகவலின் படி திருப்புல்லாணி காவல்நிலையம் சென்று குற்ற எண்.155/2012 பிரிவுகள் 457, 511 இதச வழக்கின் சம்பவ இடமான ரெகுநாதபுரம் முஸ்லீம் தெருவுக்கு காலை 05.00 மணிக்கு துப்புறியும் நாய் லைக்காவுடன் சென்றேன். சம்பவ இடத்தில் இருந்த தடயத்தில் இருந்து துப்பறியும் நாய் லைக்காவை மோப்பம் பிடிக்க செய்து சம்பவ இடத்தில் இருந்து கிழக்கு புறமாக சென்று பின்னர் வடக்கு புறம் திரும்பி மணியக்காரன் வலசை ரோடு வழியாக சிறிது தூரம் சென்று மேற்கு புறம் திரும்பி அண்ணா நகர் வழியாக இராமநாதபுரம் செல்லும் பெரியப்பட்டிணம் ரோடு வழியாக சுமார் 1 கிலோ மீட்டர் சென்று கிழக்கு புறம் திரும்பி இரட்டையூரணி செல்லும் ரோடு வழியாக சுமார் 300 மீட்டர் சென்று அதன் அருகில் உள்ள மைக்ரோ டவர் அருகில் நின்று கொண்டது. இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் யாரையும் மோப்ப நாய் கவ்வி பிடிக்க வில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.37/2013**
**Deposition of witness for prosecution -PW-5**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மேரி போர்சியா |
| Husband Name | : | திரு.டோமினிக் அருள் லாரன்ஸ் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | கிறிஸ்தவம் |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of 08 th day of November 2019.

முதல் விசாரணை :-

நான் கீழக்கரை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருப்புல்லாணி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 03.08.2012ம் தேதியன்று மதியம் 01.00 மணிக்கு பெரிய சீனி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று திருப்புல்லாணி காவல்நிலைய குற்ற எண்.155/2012 பிரிவுகள் 457, 511 இதச படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அந்த அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் ஒரு திருடனை பார்த்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்ததற்கு மதியம் 01.00 மணிக்கு தகவல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தவறான தகவலின் அடிப்படையில் எதிரிகளின் மீது பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.